செ.வெ.எண்.46 நாள்:21.10.2020

**நீலகிரி மாவட்டத்தில் உள்ள வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு திறன் வளர்க்கும் பயிற்சி பெற 31.10.2020-க்குள் tnskill.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகமானது, அமெரிக்க நிறுவனமான கோர்ஸரா நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாட்டின் வேலைவாய்ப்பற்ற 50,000 நபர்களுக்கு இணையவழியில் 11 பிரிவுகளில் 4,000த்திற்கும் மேற்பட்ட வகையிலான பாடங்களில் இலவசமாக குறுகியகால பயிற்சி அளித்திடும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியாவை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் கோர்ஸெரா நிறுவனம் 80 நாடுகளில் உலகத்தரம் வாய்ந்த திறன்களை வளர்க்கும் இலவச பயிற்சி வகுப்புகளை இணையம் வழியாக நடத்தி வருகிறது. மேலும், இந்நிறுவனம் பல்கலைக் கழகங்கள்,கல்லூரிகள், கூகுள்,ஐபிஎம் மற்றும் பிற அரசு நிறுவனங்களுடன் இணைந்து பொறியியல், இயந்திரகற்றல், கணிதம், வணிகம், கணினிஅறிவியல், டிஜிட்டல் சந்தைப்படுத்துதல், மருத்துவம், உயிரியல், சமூகஅறிவியல் மற்றும் பிற பாடங்களில் இணைய வழியில் வகுப்புகளை நடத்தி சான்றிதழ் படிப்புகள் மற்றும் பட்டப் படிப்புகளை வழங்குகிறது. உலகின் முன்னணி பல்கலைக் கழகங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் உள்ள பயிற்றுநர்களைக் கொண்டு தரமான பாட குறிப்புகள் மற்றும் காணொளி பாடத் தொகுப்புகளுடன் பயிற்றுவிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்தவுடன் இணையம் வழியாக வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி வேலைவாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியைப் பெற விரும்புவர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்தவராகவும், 18 வயது பூர்த்தியானவராகவும், வேலைவாய்ப்பற்றவராகவும் இருத்தல் வேண்டும். மேலும், இப்பயிற்சியைப் பெற ஆதார்எண், மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண் ஆகிய விவரங்களுடன் 31.10.2020க்குள் tnskill.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.